# Indian Polity Notes Part 16 in Tamil

## 16. மத்திய மாநில அரசுகளின் உறவுகள்

- மத்திய மாநில அரசுகளின் உறவுகள் பற்றி இந்திய அரசியலமைப்பு பகுதி – XI, XII ல் கூறப்பட்டுள்ளது.
- கூட்டாட்சி முறை அரசாங்கத்தில் அதிகார பகிர்ந்தளிப்பு மிக இன்றியமையாதது.
- மத்திய அரசிற்கும் மாநில அரசிற்கும் அதிகாரங்களானது 3 வகைகளாக பகிரப்பட்டுள்ளன.
    1. சட்டமியற்றல் 2. நிர்வாகம் 3. நிதிநிலை

**சட்டமியற்றல் அதிகாரம் (சரத்து – 245)**

- இந்திய நாடாளுமன்றங்கள் இந்திய முழுமைக்குமோ அல்லது ஏதேனும் ஒரு பகுதிக்கோ சட்டமியற்றலாம்.
- மாநில சட்டமன்றங்கள் அந்தந்த மாநிலங்கள் முழுமைக்கோ அல்லது அம்மாநிலங்களில் உள்ள ஏதேனும் ஒரு பகுதிக்கோ சட்டமியற்றலாம்.
- சட்டமியற்றுவதற்கு வசதிளாக சரத்து 246 – ல் 3 வகையான பட்டியல்களை குறிப்பிறப்பட்டுள்ளது.
- மத்தியப்பட்டியல் (Union List) – இத்துறைகளில் நாடாளுமன்றம் மட்டும் சட்டமியற்றலாம்.
- மாநிலப்பட்டியல் (State List) – மாநில சட்டமன்றம் மட்டும் சட்டமியற்றலாம்.
- பொது/இணைப்பு பட்டியல் (Concurrent List) – மத்திய மாநில அரசுகள் சட்டமியற்ற அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.
- ஒரு மாநிலத்திற்கு உட்படாத இந்திய பரப்பிடங்களுக்கு சட்டம் இயற்ற நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது.
- மத்தியப் பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ள துறைகளை நிர்வகிக்கும் பொருட்டு கூடுதல் நீதிமன்றங்கள் அமைக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்திடம் உள்ளது (சரத்து – 247).
- எஞ்சிய அதிகாரங்கள் (மாநில மற்றும் பொது பட்டியல்களில் குறிப்பிடப்படாத துறைகள்) நாடாளுமன்றத்திடம் உள்ளன. (சரத்து – 248).
- இந்த அதிகாரம், இரு பட்டியல்களில் குறிப்பிடப்படாத வரி விதிப்பு சட்டம் இயற்றும் அதிகாரத்தையும் உள்ளடக்கும்.

**மாநிலப் பட்டியலில் நாடாளுமன்றத்தின் சட்டமியற்றும் அதிகாரம்**

1. தேசிய நலனுக்காக (சரத்து – 249): மாநிலங்களவை கூட்டத்தில் பங்கு பெறும் உறுப்பினர்களில் மூன்றில் இரு பங்கினருக்கு குறையாமல் ஒரு தீர்மானத்தின் மூலம் ஒரு விசயத்தை தேசிய நலனுக்குகந்தது என அறிவித்தால் மாநிலப் பட்டியலில் உள்ள துறைகளில் நாடாளுமன்றம் சட்டமியற்றலாம்.

இத்தீர்மானம் ஒரு ஆண்டு நடைமுறையில் இருக்கும், மேலும் தீர்மானம் தொடர, தீர்மான நிறைவேற்றப்பட்டால் மீண்டும் ஒரு ஆண்டு நடைமுறையில் இருக்கும்.

1. நெருக்கடி நிலையின் போது (சரத்து – 250): நெருக்கடி நிலை நடைமுறையில் உள்ள போது மாநிலப் பட்டியலில் உள்ள விசயங்கள் குறித்து சட்டமியற்றும் அதிகாரத்தை நாடாளுமன்றம் பெறுகிறது. இது இந்தியா முழுமைக்குமோ அல்லது ஒரு பகுதிக்கோ சட்டம் இயற்றலாம். (நெருக்கடி நிலை முடிவுற்று 6 மாதங்களுக்கு பிறகு அச்சட்டம் செல்லாது)
2. மாநிலங்களின் ஒப்புதலுடம் (சரத்து – 252) : 2 அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களின் சட்டமன்றங்கள், மாநிலப் பட்டியலில் உள்ள ஏதேனும் சில விசயங்களில் நாடாளுமன்றம் சட்டமியற்றுவது விரும்பத்தக்கது என தீர்மானம் நிறைவேறினால் அதன் மீது நாடாளுமன்றம் சட்டம் இயற்றலாம்.
   - இந்தச் சட்டத்தை மற்ற மாநில சட்டமன்றங்களும் ஒரு தீர்மானம் இயற்றுவதன் மூலம் பின்பற்றலாம்.
   - இவ்வாறு இயற்றப்படும் சட்டத்தை திருத்தவோ, நீக்கவோ நாடாளுமன்றத்திற்கு மட்டுமே அதிகாரம் உள்ளது.
3. சர்வதேச ஒப்பந்தங்கள் (சரத்து – 253): மற்ற நாடுகளுடன் நடந்த மாநாடு, சர்வதேச மாநாட்டு முடிவுகளை, உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்தும் வகையில், இந்தியா முழுமைக்குமோ அல்லது இந்திய எல்லைக்குள் ஏதேனும் ஒரு பகுதிக்கோ எச்சட்டத்தையும் இயற்றலாம்.
4. மாநில அவசரகால நெருக்கடி நிலையில் (சரத்து – 356) : அந்த மாநிலத்தில் உள்ள பட்டியலில் உள்ள விசயங்கள் குறித்து நாடாளுமன்றம் சட்டம் இயற்றலாம்.

**சரத்து – 254**

- பொதுப்பட்டியலில் உள்ள ஒரு துறையின் மீது நாடாளுமன்றமும், சட்டமன்றமும் சட்டம் இயற்றினால்/இயற்றி இருந்தால் நாடாளுமன்றம் இயற்றிய சட்ட செல்லும், ஆனால் அவ்வாறு இயற்றப்பட்ட மாநிலச் சட்டம் குடியரசுத் தலைவரின் இசைவினைப் பெற்றிருந்தால் அம்மாநிலச் சட்டம் செல்லும். (இந்த அதிகாரம் நாடாளுமன்றம் மீண்டும் அத்துறையில் சட்டமியற்றுதலை தடுக்காது).

**நிர்வாக உறவுகள்**

- நாடாளுமன்றச் சட்டம், மாநில சட்டமன்றச் சட்டம், பரிந்துரை அல்லது முன் அனுமதி தரப்படாமல் இயற்றப்பட்டது என்கிற காரணத்திற்காக மட்டும் தவறானது என கூறமுடியாது.
- மாநிலத்தின் நிர்வாக அதிகாரம் செலுத்தும்போது, மத்திய அரசின் நிர்வாக அதிகாரத்தை செலுத்துவதற்கு பாரபட்சமாகவோ தாமதப்படுத்தும் வகையிலோ இருத்தல் கூடாது.

- மாநில அரசின் நிர்வாக அதிகாரம் நாடாளுமன்றத்தினால் இயற்றப்படும் சட்டங்களுக்கு ஒப்ப செயல்பட வேண்டும். மேலும் மத்திய அரசு மாநில அரசிற்கு தகுந்த ஏவுரைகளை அளிக்கலாம். (சரத்து – 256)
- மாநிலங்களில் உள்ள ராணுவ விவகாரங்கள், இருப்புப் பாதை, தொலைத் தொடர்புத் துறை நெடுஞ்சாலை, நீர்வழிச் சாலை போன்ற விவகாரங்களில் மத்திய அரசு மாநில அரசுகளின் மீது ஏவுரைகளை அளிக்கலாம் (சரத்து – 257).
- மத்திய அரசின் நிர்வாக அதிகாரங்களின் கீழ்வரும் பணிகளை மாநில அரசின் இசைவோடு நிபந்தனையுடனோ அல்லது நிபந்தனையற்றோ குடியரசுத் தலைவர் ஒப்படைக்கலாம் (சரத்து 258).

**சரத்து 258A**

- ஒரு மாநிலத்தின் ஆளுநர், மத்திய அரசின் ஒப்புதலோடு, மாநில அரசின் நிர்வாக அதிகாரங்களின் கீழ்வரும் பணிகளை, நிபந்தனையுடனோ அல்லது நிபந்தனையற்றோ மத்திய அரசு அல்லது அதன் அலுவலர்களிடம் ஒப்படைக்கலாம்.

**சரத்து – 260**

- இந்திய அரசு, இந்தியப் பரப்பெல்லையில் இல்லாத பிரதேசத்தில், ஒப்பந்தத்தின் கீழ் நிர்வாக, சட்டமியற்றல், நீதித்துறை செயல்களை ஏற்று நடத்தலாம்.

**சரத்து – 261**

- பொது சட்டங்கள், ஆவணங்கள், நீதித்துறை நடவடிக்கைகளுக்கு இந்தியா முழுமைக்கும் முழு நம்பிக்கையும், மரியாதையும் கொடுக்க வேண்டும்.

**நதிநீர் தொடர்பான தகராறுகள் (சரத்து – 262)**

- மாநிலங்களுக்கிடையே ஒடும் நதியின் நீர் குறித்த பயன்பாடு, பகிர்மானம், கட்டுப்பாடு தொடர்பான புகார் அல்லது தகராறை தீர்கக நாடாளுமன்றம் சட்டமியற்றலாம்.
- இதன்படி நதி வரரியச்சட்டம், 1956 மற்றும் தீர்ப்பாயம் அமைக்க மத்திய அரசுக்கு அதிகாரமளிக்கும் மாநிலங்களுக்கிடையிலான நீர்த் தகாறுச் சட்டம் 1956 இல் இயற்றப்பட்டது.
- இதன்படி ஏற்படும் தகராறுகளில் உச்சநீதிமன்றம் மற்றும் மற்ற நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்று அறிவிக்க நாடாளுமான்றத்திற்கு அதிகாரமுண்டு.

**மாநிலங்களுக்கிடையேயான குழு (சரத்து – 263)**

- இக்குழு (Inter-State Council) குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகிறது.
  1. மாநிலங்களுக்கிடையிலான தகராறுகளை விசாரணை மற்றும் ஆலோசனைகளை அளிக்கும்.

2. மத்திய மாநில அல்லது மாநிலங்களின் பொதுவான அக்கறை கொண்டுள்ள விசயங்களை புலனாய்வு செய்து அவை குறித்து விவாதித்தல்.
3. மாநிலத்தின் நல்லுறவுகளை வளர்ப்பதற்கு உண்டான விசயங்கள் மீது பரிந்துரை செய்தல்.

- இக்குழுவின் பரிந்துரை அறிவுரை மட்டுமே செய்ய இயலும்.
- மாநிலங்களுக்கிடையேயான குழு நிறுவ வேண்டும் என சர்க்காரியா குழு பரிந்துரை செய்துள்ளது.
- இதன்படி 4 வட்டார குழுக்களும் (Regional Council) மண்டலக் குழுக்களும் (Zonal Council) அமைக்கப்பட்டன.

**நிதி உறவுகள் (சரத்துக்கள் : 264 – 293)**

**(பகுதி – XII)**

- இப்பகுதியில் நிதி ஆணையம் என்பது சரத்து – 280 கீழ் அமைக்கப்பட்ட நிதி ஆணையம் (சரத்து – 264).
- சட்டத்தின் அனுமதியின்றி வரி விதிக்கவோ, வசூலிக்கவோ கூடாது (சரத்து – 265)

**இந்தியத் திரட்டு நிதி (சரத்து – 266)**

**(Consolidated Fund of India)**

“வரிகள் மற்றும் தீர்வைகள், இந்திய அரசாங்கத்தால் பெறப்படும் எல்லா வருவாய்கள், கருவூமலச் சீட்டுக்கள் வாயிலாக வசூலிக்கப்படும் எல்லா கடன் தொகைகளும் ஒன்று திரட்டப்பட்டு உருவாக்கப்படுவதே இந்தியத் திரட்டு நிதியாகும்”.

மாநில அரசால் பெறப்படும் அனைத்து வருவாய்கள், கருவூலச் சீட்டுகள், வாயிலாக பெறப்படும் கடன்கள், வழிவகைக் கடன்கள், கடனை திருப்பிச் செலுத்தும் வகையில் பெறப்படும் அனைத்து தொகைகளும்,

அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள சட்டப்படி மற்றும் காரணங்களுக்காக மற்றும் முறைகள் மூலம் மட்டுமே இந்திய திரட்டு நிதியிலிருந்து அல்லது மாநில திரட்டு நிதியிலிருந்து பணம் எடுக்க முடியும்.

**Public Account:** அரசின் சார்பாக பெறப்படும் மற்ற பொதுப் பணிகள், பொதுக்கணக்கில் (Public Account) வரவு வைக்கப்படும்.

**மத்திய – மாநில அரசுகளுக்கிடையே வருவாய் பகிர்ந்தளிப்பு**

1. மத்திய அரசால் விதிக்கப்பட்டு, மாநில அரசுகளால் வசூலிக்கப்பட்டு பயன்படுத்தப்படும் வரிகள்: (சரத்து – 268)
    - வரிகள் யூனியன் பிரதேசங்கள் விதிக்கப்பட்டால் இந்திய அரசு வசூலிக்கும்.
    - முத்திரைத் தீர்வைகள் (Stamp Duty)
    - மருந்து மற்றும் ஒப்பனை ஆக்கப் பொருள்கள் மீதான ஆயத் தீர்வைகள்.

**சரத்து – 268 – A**

சேவை வரி – மத்திய அரசால் விதிக்கப்பட்டு மத்திய மற்றும் மாநில அரசுகளால் வசூலிக்கப்படுகிறது.

2. மத்திய அரசால் விதிக்கப்பட்டு. வசூலிக்கப்பட்டு ஆனால் மாநிலங்களுக்கு அளிக்கப்படும் வரிகள்: (சரத்து – 269)
    - வேளாண் நிலம் அல்லாத பிற சொத்திற்கான இறங்குரிமையின் மீதான வரிகள்
    - வேளாண் நிலம் அல்லாத பிற சொத்திற்கான அடை சொத்துத் தீர்வை (Estate duty).
    - சேர்முனை வரிகள் (Terminal Tax)
    - இருப்புப் பாதை பயணம் மீதான வரி.
    - செய்தித்தாள் விற்பனை, வாங்குதல் அல்லது வணிகத்தின் மீதான வரிகள்.
    - சரக்குகள் அனுப்புவதன் மீதான வரிகள்.
3. மத்திய அரசால் விதிக்கப்பட்டும் வசூலிக்கப்படும் ஆனால் மத்திய – மாநிலங்கள் பகிர்ந்துகொள்ளும் வரிகள் (சரத்து – 270)
    - ✓ வருமான வரி
4. மத்திய அரசால் விதித்து வசூலிக்கப்பட்டு, மத்திய அரசிற்கும் மாநில அரசுகளுக்குமிடையே பகிர்ந்து அளிக்கப்படலாம் எனப்படும் வரிகள்.
    - ✓ Customs & Excise duties

- சில நோக்கங்களுக்காக சில தீர்வைகள் (Certain duties), மேற்கட்டணம் (Suncharge) போன்றவை விதிக்கலாம். இவைகள் அனைத்தும் இந்திய திரட்டு நிதியில் சேர்த்தல் வேண்டும் (சரத்து – 271).
- சணல் (Jute) போன்ற பொருட்களின் மீதான ஏற்றுமதி தீர்வைக்கு (Export duty) பதிலாக மானியத் தொகை அஸ்ஸாம், பீகார், ஒரிஸா, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களுக்கு மத்திய அரசால் அளிக்கப்படுகின்றது. (சரத்து – 273).
- மாநில அரசுகள் அக்கறை கொண்டுள்ளவற்றில் வரி அல்லது தீர்வையை விதிக்கும் வண்ணம் அல்லது திருத்தம் செய்யும் வகையில் சட்டம் கொண்டு வர வேண்டுமெனில் குடியரசுத் தலைவரின் பரிந்துரையை முன்னதாகப் பெறப்பட்டிருக்க வேண்டும். (சரத்து – 274)
- ஒவ்வொரு ஆண்டும் மாநிலங்களுக்கு தேவைப்படும் உதவித் தொகைகளை (Grants) இந்தியத் திரட்டு நிதியிலிருந்து மானியாமாக மத்திய அரசு வழங்கும் (சரத்து – 275).

**இந்திய நிகழ்வுசார்/அவசரகால நிதி**

**(Contingency Fund of India) (சரத்து – 267)**

- 1950 – ம் ஆண்டு 50 கோடி ரூபாய் கொண்டு இந்திய நாடாளுமன்ற சட்டத்தினால் உருவாக்கப்பட்டது.
- எதிர்பாராத அல்லது அவசரகால தேவைகளின் போது நாடாளுமன்ற அனுமதி பெறாமல் குடியரசுத் தலைவர் செலவிட அதிகாரம் உள்ளது.
- செலவிட்ட பின்பு நாடாளுமன்ற அனுமதி பெற்று எடுக்கப்பட்ட நிதியினை மீண்டும் அதில் சேர்க்கப்பட வேண்டும்.
- எதிர்பாராத அல்லது அவசரகால தேவைகளின் போது சட்டமன்ற அனுமதி பெறாமல் ஆளுநர் செலவிட அதிகாரம் உள்ளது.

நிதிக்குழு (Finance Commission) (சரத்து – 280)

- அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்து இரண்டு ஆண்டிற்குள் இந்திய குடியரசுத் தலைவர் நிதிக்குழு ஒன்றினை அமைக்க வேண்டும்.
- பின்னர் ஒவ்வொரு 5 ஆண்டிற்கு ஒருமுறை நிதிக்குழு அமைத்தல் வேண்டும்.
- நிதிக்குழுவின் தலைவர் (Chairman) மற்றும் 4 உறுப்பினர்களை குடியரசுத் தலைவர் நியமிப்பார்.
- உறுப்பினர்களின் தகுதிகள் மற்றும் தேர்வு முறையினை நாடாளுமன்றம் நிர்ணயிக்கும்.
- இக்குழு தனது பரிந்துரைகளை குடியரசுத் தலைவருக்கு கூறும்.

**பணிகள்**

1. மத்திய அரசு மற்றும் மாநிலங்களுக்கு இடையே நிதி எவ்வாறு பகிர்ந்நதளிப்பட வேண்டும்.
2. இந்தியத் திரட்டு நிதியில் இருந்து மாநிலங்களுக்கு எவ்வாறு நிதி ஒதுக்குவது என்று கொள்கையளவில் பரிந்துரை செய்வது.
3. மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் மாநில தொகுப்பு நிதியிலிருந்து பஞ்சாயத்து அல்லது நகராட்சிகளுக்கு கூடுதல் ஆதாரங்களை அதிகப்படுத்த நடவடிக்கை தொடர்பாக.
4. நல்ல நிதிநிலைக்காக குடியரசுத் தலைவர் பரிந்துரைக்கும் விடயங்கள்.
   - ஆணையம் தனது நடைமுறைகள் , அதிகராங்களை தானே நிர்ணயித்துக் கொள்ளும்.
   - குடியரசுத் தலைவர் ஏதேனும் ஆலோசனை கேட்டால்.
   - குடியரசுத் தலைவர் நிதிக்குழுவின் பரிந்துரைகளை நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு அவையிலும் சமர்ப்பிக்க வேண்டும் (சரத்து – 281).

- தொகுப்பு நிதி, அவசரகால நிதி மற்றும் பொதுக் கணக்கில் செலுத்தப்பட்ட பணம் தொடர்பான அனைத்து நாடாளுமன்ற அல்லது சட்டமன்ற சட்டம் ஒழுங்குபடுத்தும். சட்டம் இயற்றப்படவில்லையெனில், குடியரசுத் தலைவர் அல்லது ஆளுநர் விதிகள் மூலம் ஒழுங்குபடுத்துவார் (சரத்து – 283)

மின்சாரத்திற்கு வரியிலிருந்து விலக்கு (சரத்து – 287)

- இந்திய அரசு நுகரும் அல்லது நுகர்விற்காக இந்திய அரசிற்கு விற்கப்பட்ட, ரயில்வே கட்டுமானம், பராமரிப்பு, இயக்கத்திற்கு பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்முகு மாநில அரசின் சட்டம் வரி விதிக்கக் கூடாது.
- ஒரு மாநிலத்தின் சொத்து மற்றும் வருமானம் மத்திய வரிவிதிப்பிலிருந்து விலக்கப்படுதல் வேண்டும் (சரத்து – 289).
- மத்திய அரசின் ஒப்பந்தகள் குடியரசுத் தலைவர் பெயரிலும், மாநிலங்களின் ஒப்பந்தம் ஆளுநரின் பெயரிலும் செய்யப்பட வேண்டும் (சரத்து – 299).
- இவ்வாளு போடப்படும் ஒப்பந்தங்களுக்கு அவர்கள் தனிப்பட்ட பொறுப்புடையவர்கள் அல்ல.
- மத்திய மற்றும் மாநில அரசுகள் தமது பெயரில் வழக்காடவும், அப்பெயரின் மீது வழக்குத் தொடரவும் செய்யலாம் (சரத்து – 300).
- 44 – வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் 1978 – ன்படி பகுதி – III சரத்து 19(1) (f) மற்றும் 31 – ன் கீழ் ஒரு அடிப்டை உரிமையாக இருந்த சொத்துரிமையானது நீக்கப்பட்டு சரத்து 300 – A கீழ் சாதாரண உரிமையாக நுழைத்தது.

**சரத்து – 302**

- இந்திய பரப்பெல்லை முழுவதும், ஒரு மாநிலத்திற்கும் வேறொரு மாநிலத்திற்கும் இடையே நடக்கும் வியாபாரம், வணிகம் ஆகியவற்றிற்கு கட்டுப்பாடுகளை விதிக்க அதிகாரம் கொண்டது நாடாளுமன்றம் ஆகும்.